வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 26.12.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, புதுடெல்லியில் தேசிய பால் புரஸ்கார் விருதுகளை 17 குழந்தைகளுக்கு வழங்கினார்.

நமது குருமார்களின் போதனைகள், சாகிப் ஜாதாக்களின் தியாகங்கள் மற்றும் ஒற்றுமை உணர்வு இந்திய ஜனநாயகத்தின் பரந்த பரிமாணமாக அமைந்துள்ளன என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

புதுச்சேரி மற்றும் காரைக்காலில் சுனாமி ஆழிப்பேரலையின் 20-ஆவது ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

துணிச்சலும், தியாகமும், தேச பக்தியும் நிறைந்த நம்முடைய வரலாற்றை இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதன் அவசியத்தை புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் வலியுறுத்தி உள்ளார்.

*குடியரசு தலைவர்*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று புதுடெல்லியில் தேசிய பால் புரஸ்கார் விருதுகளை 17 குழந்தைகளுக்கு வழங்கினார். கலை, கலாச்சாரம், துணிச்சல், அறிவியல் தொழில் நுட்பம், சமூக சேவை,

விளையாட்டு, சுற்றுச்சூழல் ஆகிய 7 பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்ட 14 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இவ்விருதுகளை குடியரசு தலைவர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பேசிய அவர் சீக்கியர்களின் 10-ஆவது குருவான குருகோவிந்த் சிங்கின் இளைய மகன்களின் ஈடு இணையற்ற தியாகம் மற்றும் தைரியத்தை போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் வீர்பால் திவஸ் அனுசரிக்கப்படுவதாக தெரிவித்தார். குழந்தைகளின் திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுவது நமது பாரம்பரியத்தின் முக்கிய அம்சமாக திகழ்கிறது என்றார்.

இந்த பாரம்பரியம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். நமது நாடு 2047-ஆம் ஆண்டு சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் போது தற்போது விருது பெற்ற வீர சிறுவர்கள் அறிவொளி பெற்ற குடிமக்களாக இருப்பார்கள் என்றார்.

மோடி

நமது குருமார்களின் போதனைகள் சாகிப் ஜாதாக்களின் தியாகங்கள் மற்றும் நமது ஒற்றுமை உணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய ஜனநாயகத்தின் பரந்த பரிமாணம் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். புதுடெல்லியில் இன்று பாரத் மண்டபத்தில் நடைபெற்ற வீர் பால் திவஸ்

நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் நமது குருபாரம்பரியம் அனைத்து தரப்பு மக்களையும் சமமான மரியாதையுடன் அணுகுவதற்கு கற்றுத் தந்துள்ளது என்றும் இந்திய அரசியலைப்பும் அதே எண்ணத்துடன் நம்மை ஊக்குவிக்கிறது என்றும் தெரிவித்தார். துணிச்சல் மிகுந்த சாகிப்ஜாதாக்களின் தியாக வாழ்க்கை நாட்டின் ஒற்றுமை மற்றும் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதை நமக்கு கற்பிப்பதாக கூறினார். இந்தியாவின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டை மேலோங்க வைப்பதே முக்கியமானது என்று நமது அரசியலைப்பு மக்களுக்கு வழிகாட்டுவதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். சாகிப்ஜாதா ஜோரவார்சிங் மற்றும் சாகிப்ஜாதா பாதேசிங் மிகவும் இளையவர்களாக இருந்தாலும் அவர்களின் துணிச்சல் ஆகாயத்தை விட மேலானது என்றும் தெரிவித்தார். எவ்வளவு கடினமான சூழ்நிலையாக இருந்தாலும், நாட்டின் நலன்கள் மட்டுமே மிக முக்கியமானது என்பதை வீர் பால் திவஸ் தத்துவம் நமக்கு கற்றுத் தருகிறது என்றும் வரலாற்றுக் காலம் தொட்டு தற்போது வரை இந்தியாவின் முன்னேற்றத்தில் இளையோரின் ஆற்றல் பெரும் பங்கு வகித்துள்ளது என்றும் பிரதமர் கூறினார். குரு கோவிந் சிங்கின் மகன்களான சாகிப்ஜாதாக்களின் துணிச்சலுக்கும் நீதிக்கான அவர்களின் போராட்டத்திற்கும் மரியாதை செலுத்தும் வகையில் டிசம்பர் 26-ஆம்

தேதியை வீர்பால் திவஸ் கொண்டாடப்படும் என்று கடந்த 2022-ஆம் ஆண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்தார்.

புதுடெல்லியில் இன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சியின் போது பிரதமர் சுபோஷி கிராம பஞ்சாயத்து இயக்கத்தை தொடக்கி வைத்தார். ஊட்டச்சத்து தொடர்பான சேவைகளை சிறப்பாக செயல்படுத்துவதோடு இந்த இயக்கத்தில் மக்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்தி ஊட்டச்சத்து மிகுந்த இந்தியாவை உருவாக்குவதே இந்த இயக்கத்தின் நோக்கமாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் பிரதான் மந்திரி ராஷ்டிரிய பால் புரஸ்கார் விருது பெற்ற 3 ஆயிரத்து 500 சிறுவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

*வாசுதேவ நாயர்-அஞ்சலி*

மலையாள இலக்கியம் மற்றும் திரைப்படத்துறையில் மிகவும் மதிப்பு மிக்கவர்களில் ஒருவரான பத்ம பூஷண் விருது பெற்றவருமான எம் டி வாசுதேவ நாயர் மறைவிற்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக ஊடக தளத்தில் மனித உணர்வுகளின் ஆழமான ஆய்வுகளுடன் கூடிய அவரது படைப்புகள் தலைமுறைகளை வடிவமைத்துள்ளது என்று தெரிவித்துள்ளார். குரல் எழுப்ப

இயலாதவர்களுக்காகவும் விளிம்பு நிலை மக்களுக்காகவும் அவர் குரல் கொடுத்தார் என்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் குறித்தே தனது எண்ணங்கள் உள்ளன என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

*சுனாமி*

புதுச்சேரியில் சுனாமி ஆழிப்பேரலையின் 20-ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனை ஒட்டி கடற்கரை சாலையில் காந்தி சிலை அருகே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் மலர் வளையம் வைத்து சுனாமியின் போது உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். அவர்களுடன் சட்டப் பேரவை தலைவர் திரு செல்வம், உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், பொது பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், வேளாண் துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு சாய் ஜே சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கல்யாண சுந்தரம், திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, திரு லட்சுமிகாந்தன், திரு பிரகாஷ்குமார் ஆகியோரும் கலந்து கொண்டு சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

காரைக்கால் கடற்கரையில் உள்ள சுனாமி நினைவிடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடிமைப் பொருள் வழங்கல் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன், மாவட்ட ஆட்சியர் திரு மணிகண்டன் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திருமதி லட்சுமி சௌவ்ஜன்யா ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். அவர்களுடன் காரைக்கால் மாவட்ட அரசு அதிகாரிகளும் முக்கிய பிரமுகர்கள், மீனவ கிராம மக்கள் ஆகியோரும் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

*வீரதீர-சிறுவர்கள் தினம்*

துணிச்சலும், தியாகமும், ஒற்றுமையும் தேச பக்தியும் நிறைந்த நம்முடைய வரலாற்றை இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது நம்முடைய கடமை என்று புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார். புதுச்சேரி அரசு சார்பில் கம்பன் கலையரங்கில் இன்று நடைபெற்ற வீர்பால் திவஸ் வீரதீர குழந்தைகள் தின விழாவில் கலந்து கொண்டு, சிறப்புரையாற்றிய அவர் நமது நாடு பல கலாச்சாரங்கள், மதங்கள், இனங்கள் ஒன்றாக சேர்ந்த நாடு என்றும், வேற்றுமையில் ஒற்றுமையை போற்றும் நமது நாட்டில் பண்பாடு, மதங்கள் எல்லாம் தீமைகளுக்கு எதிராக வீரத்தோடு போராட வேண்டும்

என்பதை வலியுறுத்துகின்றன என்றார். . துணை நிலை ஆளுநர் மேலும் கூறுகையில்................

இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி, இளம் வயதில் இருந்தே நாட்டின் வளர்ச்சியில் பங்கெடுப்பது குறித்தும், நாட்டு பற்று மற்றும் தியாக உணர்வு மற்றும் துணிச்சலை வளர்க்கும் வகையில் இந்த வீரதீர சிறுவர்கள் தின விழா கொண்டாடப்படுவதாக தெரிவித்தார். மற்றவர்களுக்கு உதவும் எண்ணத்தை வளர்த்துக் கொள்வது வேற்றுமையில் ஒற்றுமையுடன் இருப்பது என்பது நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் தேவையானது என்றார். இவ்விழாவில் வீரதீர சிறுவர்கள் தினத்தையொட்டி நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற சிறுவர்-சிறுமிகளுக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் பரிசுகள் வழங்கி சிறப்பித்தனர். மேலும் இவ்விழாவில் சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு அனிபால் கென்னடி, மாவட்ட ஆட்சியர் திரு குலாத்துங்கன், துணை நிலை ஆளுநரின் செயலர் திரு நெடுஞ்செழியன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

*நுகர்வோர் தின விழா*

**புதுச்சேரி அரசு சார்பில் நுகர்வோர் தின விழா கருவடிக்குப்பத்தில் உள்ள காமராஜர் மணி மண்டபத்தில் இன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி, கலந்து கொண்டு சிறப்பாக செயல்பட்ட நுகர்வோர் தன்னார்வ அமைப்புகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார். அப்போது உரையாற்றிய அவர் புதுச்சேரியில் இன்னும் 10 நாட்களுக்குள் ரேஷன் கடைகள் மூலமாக இலவச அரிசி, மஞ்சள் அட்டை தாரர்களுக்கு 10 கிலோவும், சிவப்பு அட்டைதாரர்களுக்கு 20 கிலோவும் வழங்கப்படும் என்றார். ரேஷன் கடைகள் மூலமாக மேலும் சில பொருட்களை வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்றார். தொடர்ந்து பேசிய அவர் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து பேசிய போது ......................**

*வானிலை*

**தெற்கு ஆந்திரா மற்றும் வட தமிழக கடலோரப் பகுதிகளில் நிலவும் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியானது இன்று காலை நிலவரப்படி மேலும் வலுவிழந்து அதே பகுதிகளில் நிலவுவதால் இன்றும் நாளையும், தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

வரும் 28-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் மிதமான மழை பெய்ய வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த 3 நாட்களில் அதிகாலை நேரத்தில் ஒருசில இடங்களில் லேசான பனி மூட்டம் காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, புதுடெல்லியில் தேசிய பால் புரஸ்கார் விருதுகளை 17 குழந்தைகளுக்கு வழங்கினார்.

நமது குருமார்களின் போதனைகள், சாகிப் ஜாதாக்களின் தியாகங்கள் மற்றும் ஒற்றுமை உணர்வு இந்திய ஜனநாயகத்தின் பரந்த பரிமாணமாக அமைந்துள்ளன என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

புதுச்சேரி மற்றும் காரைக்காலில் சுனாமி ஆழிப்பேரலையின் 20-ஆவது ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

துணிச்சலும், தியாகமும், தேச பக்தியும் நிறைந்த நம்முடைய வரலாற்றை இளம் தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதன் அவசியத்தை புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் வலியுறுத்தி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---